சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:24/2023

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 15ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் இந்திராணி (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

15.03.2024

1) விபத்தில் இறந்துபோனது என் கணவர். விபத்து நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது. என் மகள் போன் செய்து சொன்ன பிறகு தான் எனக்கு தெரியும். என் கணவர் நந்தினி டெக்டெல்ஸ் என்ற கடையை நடத்தி வந்தார். கடை நடத்தி வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை. தற்போது அந்த கடையை நான் தான் நடத்தி வருகிறேன். விபத்து தேதியன்று என் கணவரின் வயது 62 ஆகும். வயதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை. விபத்து என் கணவர் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனகுறைவால் விபத்து நடக்காத காரணத்தினால் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.